SHANKAR IAS ACADEMY™
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



## மீ. பக்தவத்சலம்


SHANKAR IAS ACADEMY
AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 7. எம். பக்தவத்சலம்

### இளம் பருவம்

- இவர் 1897 அக்டோபர் 9 இல் பிறந்தார்.
- இவரின் பெற்றோர்: 'மீஞ்சூர்' கனகசபாபதி – மல்லிகா அம்மையார்.
- 'மீஞ்சூர்' கனகசபாபதி பக்தவத்சலம் என்னும் பெயரில் அழைக்கப்பட்ட இவர் பிறகு மீ. பக்தவத்சலம் (எம். பக்தவத்சலம்) என்று ஆனார்.
- இவர் தாய்வழி உறவான (தாய் மாமன்) C.N. முத்துரங்கம் மற்றும் C.N.எவளப்பர் ஆகியோரால் வளர்க்கப்பட்டார்.
- இவர் பள்ளிக் கல்வி பயின்ற நிறுவனங்கள்:
    - புரசைவாக்கம் லூத்ரன் மிஷன் பள்ளி
    - மயிலாப்பூர் 'பினாத்தூர்' சுப்ரமணியம் உயர்நிலைப் பள்ளி
- இவர் உயர்க் கல்வி பயின்ற நிறுவனங்கள்:
    - சென்னை மாநிலக் கல்லூரி (Presidency College)
    - சென்னை சட்டக் கல்லூரி

### பொது வாழ்க்கை

- இவர் **அல்லாடி கிருஷ்ண சாமியிடம்** இளம் வழக்குரைஞராக (Junior Advocate) பணி புரிந்தார்.
- இவர் அன்னிபெசன்ட் தொடங்கிய தன்னாட்சி இயக்கத்தில் பணியாற்றினார்.
- இவர் 1922 இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர் ஆனார்.

SHANKAR IAS ACADEMY

- இவர் காங்கிரசின் கொள்கைகளை பரப்புரை செய்ய **இந்தியா** என்ற நாளேட்டை தொடங்கினார்.
  - இவருக்கு முன்னர் இந்தியா என்ற பெயரில் **பாரதியார்** ஒரு பத்திரிக்கையை நடத்தினார்.
- இவர் **சென்னை மகாஜன சங்கத்தின்** செயலாளராக சில காலம் பணியாற்றினார்.
- இவர் பங்கேற்ற போராட்டங்கள்:
  - ரௌலட் சத்யாகிரகம் (1919)
  - சைமன் குழு எதிர்ப்புப் போராட்டம் (1928)
  - வேதாரண்யம் உப்பு சத்யாகிரகம் (1930)
  - சட்டமறுப்பு இயக்கம் (1932)
  - தனிநபர் சத்யாகிரகம் (1940)
  - வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942)
- 1932 இல் **விடுதலை தினம் கொண்டாட்டம்** காரணமாக இவர் கைது செய்யப்பட்டு **6 மாதங்கள்** சிறையில் அடைக்கப்பட்டார்.
  - லாகூர் காங்கிரஸ் கூட்டத் தொடரில் (1929) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 இல் விடுதலை தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
- இவர் சென்னை மாநகராட்சியின் **துணை மேயராகப்** பணியாற்றினார். (1936 - 1937)
- 1937 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 1946 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்ற இவர் அதன் பின்னர் கீழ்க்கண்ட முதலமைச்சர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றார்.
  - 1946 – பொதுப்பணி (டி. பிரகாசம் அமைச்சரவை)
  - 1947 – பொதுப்பணி (ஓமந்தூரார் அமைச்சரவை)
  - 1949 – செய்தி மற்றும் பொதுப்பணி (குமாரசாமி ராஜா அமைச்சரவை)
  - 1953 – வேளாண்மை (இராஜாஜி அமைச்சரவை)

SHANKAR IAS ACADEMY

- 1954 – வேளாண்மை மற்றும் தொழிற்துறை (காமராசர் அமைச்சரவை)
- 1957 – உள்துறை (காமராசர் அமைச்சரவை)
- 1962 – நிதி மற்றும் கல்வி (காமராசர் அமைச்சரவை)

## எம். பக்தவத்சலம் குழு

➢ **பெண் கல்விக்கான தேசிய கவுன்சில்** (The National Council for Women Education) ஆனது பெண்களின் கல்வி தொடர்பாக பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற **எம். பக்தவத்சலம்** தலைமையில் **1963** இல் **ஒரு குழுவினை** அமைத்தது. இக்குழுவின் முக்கிய பரிந்துரைகள்:

- அனைத்து மாநிலங்களும் துவக்கப்பள்ளிகளில் (பெண்) ஆசிரியைகளை நியமிக்க வேண்டும்.
- பெண் குழந்தைகளை அதிகளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஒரு மேற்பார்வையிடும் அமைப்பு நிறுவப்பட வேண்டும்.
- பெண் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியானது **ஹன்சா மேத்தா குழு** (1962) வழங்கிய வழிகாட்டுதலின் படி மேம்படுத்தப்பட வேண்டும். குடும்ப அறிவியல் பாடம் (Domestic Science) கட்டாயம் ஆக்கப்பட வேண்டும்.
- மத்திய சமூக நலத்துறையினால் உருவாக்கப்பட்ட மேன்மையான பாடப்பகுதிகளை 18 வயதிற்கு மேல் உள்ள பெண்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும்.
- மாநில அரசானது மாநாடுகள், ஆய்வரங்கம் மற்றும் ஒலி - ஒளி காட்சிப் பதிவுகள் மூலம் பொதுமக்களிடம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.
- மத்திய அரசானது பெண் கல்விக்காக அதிகளவில் பொருளாதார உதவியை செய்ய வேண்டும்.
- ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் **ஊரகப்பகுதி பெண்களுக்கு இடஒதுக்கீடு** அளிக்க வேண்டும்.

SHANKAR IAS ACADEMY

## முதலமைச்சர்

- 1963 இல் **கே-பிளான்** படி அப்போதைய தமிழக முதலமைச்சர் **காமராசர்** பதவி விலகினார். அவரைத் தொடர்ந்து பக்தவத்சலம் முதலமைச்சர் ஆனார்.
- இவரின் அமைச்சரவை:
    - பி. கக்கன் (உள்துறை)
    - ஆர். வெங்கட்ராமன் (தொழிற்துறை மற்றும் மின்சாரம்)
    - ஜோதி வெங்கடாசலம் (சுகாதாரம்)
    - வி. ராமையா (பொதுப்பணி)
    - என்.எஸ்.எஸ். மன்றாடியார் (உணவு)
    - எஸ்.எம்.ஏ. மஜித் (உள்ளாட்சித் துறை)
    - பூவராகவன் (செய்தி மற்றும் விளம்பரம்)
- இவர் ஆட்சியின் பொழுது (1963) R.S.S இயக்கத் தலைவர் **கோல்வால்க்கர் விவேகானந்தருக்கு** கன்னியாகுமரியில் **நினைவு மண்டபம்** அமைக்க **ஏக்நாத் ரானடே** தலைமையில் குழு அமைத்த பொழுது அதற்கு பக்தவத்சலம் எதிர்ப்பு தெரிவித்தார். பின்னர் அத்திட்டத்திற்கு நிர்பந்தம் காரணமாக அனுமதி வழங்கினார்.

## மாணவர் நலத்திட்டங்கள்

- 1964 இல் **மூன்று தடுப்பூசி திட்டத்தை** (Triple Vaccine) பள்ளியில் சேரும் வயதில் உள்ள குழந்தைகளுக்காக (pre-school going children) இவர் நடைமுறைப்படுத்தினார்.
- இவரின் ஆட்சியின் பொழுது **பள்ளிகளில் மருத்துவ மேற்பார்வைத் திட்டம்** (School Medical Inspection Programme) கொண்டு வரப்பட்டு பள்ளி மாணவர்களின் உடல்நலமானது காக்கப்பட்டது.
- **இந்து அறநிலையத்துறையின்** கீழ் உள்ள **திருக்கோவில்களின் நிதியிலிருந்து** பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள் போன்ற **சமுதாய நலத்திட்டங்களை** தொடங்கலாம் என்னும் சட்டத்தை (சட்டத்திருத்தம்) இவர் கொண்டு வந்தார்.

SHANKAR IAS ACADEMY

- 1966 இல் இவரின் ஆட்சியின் பொழுது **மதுரைப் பல்கலைக்கழகம்** தொடங்கப்பட்டது.

## நீர் மேலாண்மை

- இவர் தொடங்கிய நீர்மின் திட்டங்கள்
    - கோதையாறு நீர்மின் திட்டம்
    - சர்க்கார்பதி நீர்மின் திட்டம்
    - சோலையாறு நீர்மின் திட்டம்
- மணிமுத்தாறு நதித்திட்டம் (கல்லிடைக்குறிச்சி), கடனா நீர்பாசனத் திட்டம் (அம்பா சமுத்திரம்) ஆகியவை இவரால் நிறைவேற்றப்பட்டன.
- இவரின் ஆட்சியின் பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை ஆகியவை கட்டி முடிக்கப்பட்டது.

## சந்தித்த நெருக்கடிகள்

- இவர் முதலமைச்சராக இருந்த பொழுது கீழ்க்கண்ட சிக்கல்களை சந்தித்தார்.
    - உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு (அரிசி தட்டுப்பாடு)
    - விலைவாசி உயர்வு
    - இந்தி எதிர்ப்புப் போராட்டம்
- பொருட்களின் விலைவாசியை கட்டுப்படுத்த இவர் வருவாய்த் துறையில் **ஊழல் தடுப்புப் பிரிவை** (Vigilance Cell) யை தொடங்கினார்.
- இவர் மக்களுக்கு தேவையான பொருட்களை **கூட்டுறவு அமைப்புகள்** மூலம் வழங்கினார்.
- இவர் **ADT 27** என்ற புதிய வகை நெல்விதையை அறிமுகப்படுத்தினார்.
- இவர் **பண்ணை மேலாண்மைத் திட்டத்தை** அறிமுகப்படுத்தினார்.

SHANKAR IAS ACADEMY

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்

- **எளிமையான முதல்வர், நேர்மையான முதல்வர், ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளாகாதவர்** போன்ற சிறப்புகளை பெற்ற இவரின் ஆட்சியின் பொழுது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆனது தமிழக வரலாற்றை மாற்றிப் போட்ட ஒரு நிகழ்வாகும்.
- மத்திய அரசின் மொழிக் கொள்கைகளை சமரசமின்றி பின்பற்றியவர் இவர். அதுவே இவருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தமிழகத்தில் எதிராக அமைந்து போனது.
- **1835** ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் இந்தியாவின் **ஆட்சி மொழியாக ஆங்கிலம்** இருந்து வந்தது.
- விடுதலைப் போராட்டத்தின் பொழுது சுதந்திர இந்தியாவின் **தேசிய மொழியாக** (National Language) **இந்தியை** கொண்டு வர வேண்டும் என்று **தேசியத் தலைவர்கள்** விரும்பினர்.
- ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்களின் மற்றொரு பிரிவினர் இது குறித்து மாற்று கருத்து கொண்டிருந்தனர்.
- ஆதலால் இதனை களைவதற்கு ஒரு குழுவை அமைத்தனர். அதில் முக்கியமானவர்கள்:
  - என். கோபாலசாமி அய்யங்கார்
  - டி.டி. கிருஷ்ணமாச்சாரி
  - அல்லாடி கிருஷ்ணசாமி
  - கே.எம். முன்ஷி
  - பி.ஆர். அம்பேத்கர்
  - அபுல்கலாம் ஆசாத்
  - சியாம பிரசாத் முகர்ஜி
  - கே. சந்தானம்
  - இக்குழுவினர் ஒரு திட்டத்தை முன்மொழிந்தனர். அது **'முன்ஷி – அய்யங்கார் திட்டம்'** (Munshi – Iyengar Formula) என அழைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- இதன் பரிந்துரைகள் மூலம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இடையே ஆட்சி மொழி குறித்து உடன்பாடு ஏற்படவில்லை.
- பின்னர் **இராசேந்திர பிரசாத்** தலைமையில் கூடிய **அரசியல் நிர்ணய சபை** ஆனது **1949 செப்டம்பர் 14** இல் இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டது.
- செப்டம்பர் 14-ஆம் தேதி ஆனது **இந்தி தினமாக** (Hindi Diwas) ஆக கொண்டாடப்பட்டு வருகிறது.
- அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த (ஜனவரி 26, 1950) 15 ஆண்டுகள் வரை (அதாவது 1965 வரை) ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக பயன்பாட்டில் இருக்கும். 1965-ற்கு பின்னர் ஆங்கிலம் ஆனது ஆட்சி மொழியாக தொடர்வதற்கு **நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்** என கூறப்பட்டது.
- **343வது சரத்தின்படி** தேவநாகரி வடிவத்திலான இந்தி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழி ஆகும்.
- 1955 இல் ஆட்சி மொழி ஆணையமானது **B.G. கேர்** தலைமையில் அமைக்கப்பட்டது. இது தனது பரிந்துரைகளை 1956 இல் வழங்கியது. இதன் பரிந்துரைகளை ஆராய 1957 இல் **கோவிந்த வல்லபந்த்** தலைமையில் பாராளுமன்றக் குழு அமைக்கப்பட்டது.
    - இவை இந்தி மொழியை பல்வேறு தளங்களில் பரப்பியது.
- மேற்கண்ட நிகழ்வுகளை இந்தி திணிப்பு என்று தமிழகத்தில் உள்ள அண்ணா தலைமையிலான தி.மு.க கருதியது.
- அண்ணா கொடுத்த நெருக்கடி காரணமாக நேரு அவர்கள் 1959 ஆகஸ்ட் 7 இல் நாடாளுமன்றத்தில் ஒரு வாக்குறுதியை அளித்தார். (இது **நேருவின் வாக்குறுதி** என அழைக்கப்பட்டது) அவை:
    - இந்தி திணிப்பு இருக்கவே கூடாது.
    - ஆங்கிலம் ஆனது ஒரு கூடுதல் இணை மொழியாக (Associate Additional Language) ஆக இருக்கும்.

➢ 1963 இல் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி

SHANKAR IAS ACADEMY

- 1965 ஜனவரி 26 முதல் இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்.
- இந்திக்கு துணையாக ஆங்கிலம் பயன்படுத்தலாம். (May)
- May என்ற பதம் மூலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்தாமலும் போகலாம் என்று தெரியவந்தது.
- இதன் சாரம் என்னவெனில் 1965-ற்கு பிறகு மத்திய அரசின் வேலைவாய்ப்பிற்கான தேர்வுகளின் (UPSC, etc) வினாத்தாள்கள் இந்தி மொழியில் **கட்டாயம்** இருக்கும். அதே வேளையில் வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் **இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம்.** (இது தான் தமிழ்நாட்டில் எழுந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கான அடிப்படை ஆகும்).
- தமிழக கட்சித் தலைவர்கள் குறிப்பாக அண்ணாதுரை அவர்கள் இதன் பாதிப்பை முன் கூட்டியே உணர்ந்து கூறினார்.
- 1964 இல் நேரு காலமானார்.
- 1965 இல் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வரும் முன்னர் நேருவின் வாக்குறுதிகள் (ஆங்கிலம் ஆட்சி மொழியாக தொடருதல்) சட்டமாக்கப்பட வேண்டும் என்று அண்ணா கேட்டுக் கொண்டார். ஆனால் அவரின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளபடவில்லை.
- 1965 ஜனவரி 26-ற்கு முன்பாக அண்ணா தலைமையிலான திமுக மட்டுமே ஆட்சிமொழிச் சட்டத்தின் குறைகளை சுட்டிக்காட்டி போராடி வந்தது. ஆனால் ஆட்சி மொழிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அது கட்சி சார்பற்ற மாணவர்களிடம் பரவியது. பின்னர் மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்து போராடத் தொடங்கினர். ரயில் மறியல், பொது வேலை நிறுத்தம் என போராட்டம் அடுத்த நிலைக்கு சென்று பொதுமக்களின் ஆதரவைப் பெற்றது.
- மத்திய அரசில் (காங்கிரஸ்) அமைச்சராக பதவி வகித்த **சி. சுப்ரமணியம்** மற்றும் **ஓ.வி. அழகேசன்** ஆகியோர் ஆட்சி மொழிச் சிக்கல் தொடர்பாக ராஜினாமா செய்வதாக அறிவித்தனர்.
- பக்தவத்சலத்தினால் போராட்டத்தினை முடிவுக்கு கொண்டு வர இயலவில்லை. தமிழகத்திற்கு துணை இராணுவம் வந்தது.

SHANKAR IAS ACADEMY

- தமிழக மாணவர்களின் கோரிக்கைகளில் முக்கியமானவை:
  - அரசியலமைப்பின் **பகுதி XVII** (Part XVII) யை நீக்க வேண்டும்
  - மத்திய அரசின் வேலைக்கான தேர்வுகளை **ஆங்கிலம்** மற்றும் **எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளிலும்** நடத்தவேண்டும்.
  - 1950 ற்கு முன்னர் இருந்ததுபோல் ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.
- பின்னர் மத்திய அரசும் மாணவர் போராட்டத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க முன்வருவதாக அறிவித்தது.
- மாணவர்கள் போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக 1965 மார்ச் 14 இல் அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர்.
- பிரதமர் **லால்பகதூர் சாஸ்திரி நேருவின் வாக்குறுதியை** பின்பற்றுவதாக உறுதி அளித்தார்.
- தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் **விளைந்த நன்மைகள்:**
  - மத்திய அரசின் வேலைவாய்ப்பிற்கான எழுத்துத் தேர்வுகளை (Written Test) **பிராந்திய மொழிகளில் எழுத வாய்ப்பு உருவாகியது**.
  - நேரு வாக்குறுதியை 1967இல் கொண்டுவரப்பட்ட **ஆட்சி மொழிச் சட்டம் (திருத்தச் சட்டம்)** ஆனது சட்டமாக்கியது. (அதாவது **ஆங்கிலம் ஆட்சி மொழியாக தொடரும்**)

➢ 1967 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை இழந்த காங்கிரஸ் அதற்கு பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்கவே இல்லை. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் **கடைசி முதலமைச்சர்** பக்தவத்சலமே ஆவார்.

➢ இவர் 1987 பிப்ரவரி 13 இல் இயற்கை எய்தினார்.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY